தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு — திருக்குறள்.

தொகுதி V.	துர்மதி௵ மாசிமீ	பகுதி 11

பாசியினம்.

The Algæ

சென்னைக் கிறிஸ்தவன் கலாசாலையில்
உயிர்நூல் ஆசிரியராயிருக்கும்
ஸ்ரீமான் M. S. ஸபேச ஐயர் M. A. எழுதியது.

தோன்றுமிடமும் போதுக்குணங்களும்:—நீர்ப்பாசிகள், செடியினங்கள் பலவற்றுள் முக்கியமான ஒரு இனமாவன. குளங்களிலும், குட்டைகளிலும், இவைகள் குப்பல் குப்பலாய் மிதந்து கொண்டிருப்பன. குளக்கரைப் படிக்கட்டுகள் மீதும் நெருங்கிப் படர்ந்து வளர்வதை யாவரும் கண்டிருக்கலாம். மேலும் தண்ணீர் தங்கு மிடங்களெல்லா வற்றிலும் பாசியினச் செடியைக்காணலாம். மழையில் நனைந்துள சுவரின் மேலிலும், மரங்களின் மேலிலும், பசுமை நிறம் அல்லது நீலப்பச்சை வர்ணம் தோன்றுவதும் பாசியினத்தைச் சேர்ந்த சில அற்புதமான செடிகள் கோடிக்கணக்காய் நெருங்கி வளர்வதாலேயே. கடலிலுள்ள உப்புநீரிலும் இவ்வினச்செடிகள் செழிப்பாய் வளர்கின்றன. சுத்தநீரில் காணப்படும் பாசி

குளக்கட்டிலும், கடற்பாசிகள் (Seaweeds) மிகப்பெரியதாயும் அங்கவிரிவுகளுடையனவாயும் காணப்படும். படம் 4. கடலிற்செல்லும் கப்பல்களுக்கும் தடையா யிருக்கும்படி கடற்பாசிகள் சில இடங்களில் கூட்டமாய் வளர்கின்றன. கடற்பாசிகள் பாறைகளை யொட்டியே வளர்வன. அலையாலும் காற்றாலும் கிழிக்கப்பட்டுக் கடற்பாசியினுடல் சமுத்திரத்தில் துண்டு துண்டாய் மிதப்பதுமுண்டு. கடற்பாசிகள் சிலவே பசுமையாயிருப்பன. பசுமைநிறத் தூளுடன் வேறு



படம் 1.

. படம் 1. நுட்பமான பாசி வகைகள்:—சித்திரம் 1 (i-v) சுவரிலுள்ள நுட்பமான பாசி. அதன் சந்ததிவிவரம், சித்திரம் 2 ஜலத்தில் உலாவும் நுட்பமான பாசி. சித்திரம் 3, 4, 5. ஜலத்தில் மிதக்கும் நுட்பமான பாசிகள்.

தூள்கள் பல பாசிகளுள்ளிருப்பதால் இவைகள் சிவப்பாகவும் துருநிறமாகவும் காணப்படும். (Red Seaweeds and Brown Seaweeds). நிறத்தால் பாசிகளை பச்சைப் பாசிகளென்றும், நீலப்பச்சைப் பாசிகளென்றும், துருநிறப்பாசிகளென்றும், சிவப்புப் பாசிகளென்றும் வழங்கிவருகிறார்கள்.

(Green algae, Blue green algae, Brown algae and Red algae) முதலிரண்டும் விசேஷமாய்ச் சுத்தநீரிலும் சற்று உப்பான நீரிலும் உள. பின்னிரண்டு வகைகளும் பெரும்பாலும் கடலிலேயே வளர்வனவாகும்.

உடலின் தோற்றம் :— சாதாரணமாய்க் குளங்களில் காணப்படும் பாசிகள், சிடுக்குண்ட, பசுமைவாய்ந்த சன்னமான நூல் தொகுதிபோன்ற உடலையுடையன. (படம் 2. சித்திரம் 1). படிக்கட்டுகளின் மேல்வளரும் பாசியும் இத்தகையநூல் தொகுதிபோன்றே காணப்படுகிறது. ஒருநூலைப் பூதக்கண்ணாடியின் கீழ்ப்பார்த்தால் உடலின் உள்ளமைப்பு நன்றாய்த் தெரியவரும். ஒவ்வொரு நாலிலும் பல சிறிய அறைகள் ஒன்றின் முன்னொன்றாய் ஒழுங்காய் அடுக்கப்பட்டிருக்கின்றன. (படம் 2. சித்திரம் 2, 3, 4, i). சில பாசிகள் குழாய் போன்றும் அட்டையாயுமிருக்கலாம். இந் நூல் போன்ற உடல் மிகவும் அற்பமானதே. வேரென்றும் இலையென்றும் அங்கபேதமில்லை. உடலும் சன்னமாயும் மிருதுவாயு மிருக்கிறது. சில பாசிகளில், நூல் நுனி, சிறிது குறுகியும், அடி, இடுக்குக்களில் ஊன்றிக் கொள்வதற்கேற்ப நீண்டு, கூர்மையாயுமிருக்கும் (படம் 2 சித்திரம் 3, 4 i). கடற்பாசிகளில் ஊன்றிக் கொள்வதற்கான வேர்போன்ற அங்கங்களும், உணவுப் பொருள்களை தயார்செய்யத் தட்டையான இலைபோன்ற அங்கங்களும், இலைபோன்ற அங்கங்களைத்தாங்க தண்டுகளும் காணப்படுகின்றன. (படம் 4 சித்திரம் 1).

மேலே கூறிய பாசிகள் கண்ணால் எளிதில் காணக்கூடியவைகள். சுவரிலும், மரத்திலும் தோன்றும் பாசிகளோ மிகவும் நுட்பமானவை. பூதக்கண்ணாடியின் கீழ்ப் பார்த்தால் இவைகள் சிறிய உருண்டையான பசுந் தூள்களாகத்

தோன்றும். நுட்பமான பாசிகள் பலவித வடிவங்களுடையன (படம் 1). இவற்றுள் பலவகைகள் ஜலத்தில் வசிப்பனவாகும். ஜலத்திலுள்ள நுட்பமான பாசிகளுள் சில தம்முடலின்



படம் 2.

படம் 2. நூல்போன்ற பாசிகள்:—சித்திரம் (1) பாசிக்கூட்டம். (2) பூதக்கண்ணாடியின் கீழ் ஒரு நூலின் தோற்றம். பிசின் போன்று மாறிய சுவரைப்பார்க்கவும். (3) கிளையையுடைய நூல் நுனிகுறுகியிருத்தல். (4) (i—xv) ஒரு பாசி சந்ததி யுண்டுபண்ணும் விதம். (விவரம் வியாசத்தில் காணவும்)

குறுகிய முனையினில் இரண்டு சிறிய சன்ன துய்களை (Cilia) உடையன (படம் 1 சித்திரம் 2). இத்துய்கள் துடிப்பதால் பாசி ஆங்குமிங்கும் ஓடிச் செல்லக்கூடும். செடிகளுடைய

சில நகரக்கூடுமென்று நாமறியவேண்டும். நுட்பமானபாசிகள் ஜீவாதார வஸ்துவை ஒரு சிறிய அறையில் அடக்கியிருக்கின்றன. இவைகளின் உடல் ஒரு சிறிய அறையேயாகும். சிறியதாயினும், பெரிய உயிர்ப் பிராணிகள் செய்துவரும் தொழில்கள் யாவையும் இவை செய்யக்கூடியன. பெரிய பாசிகளில் பல அறைகள் உள. அறைகள் ஏறக்குறைய எல்லாம் ஒன்றுபோலவேயிருப்பன. அநேகம் பாசிகளில் ஜீவாதார வஸ்துவைச் சூழ்ந்துள அறைச் சுவர்கள் சில சமயங்களில் பிசின் தன்மையாய் மாறுபடுகின்றன. (படம் 2 சித்திரம் 2) அதுபற்றியே குளக்கரைப் படிகள், பாசிகள் வளருங்கால், வழுக்குகின்றன.

உணவு அடையும் விதம்:—வேண்டிய உணவுப்பொருள்களைப் பாசிகள் தம்முடல் முழுவதாலும் எடுத்துக்கொள்கின்றன. கரியமிலவாயுவையும் சுத்தநீரையும், சூரிய வெளிச்சத்தின் உதவியால், பிரித்து வேறுவிதச் சர்க்கரை அல்லது மாத்துளாக, பூக்களையுடைய செடிகளைப்போலவே, பாசிகளும் தயார் செய்கின்றன. மாத்துள் பலவித உப்புகளுடன் சேர்வதால், நைட்ரஜன் சேர்ந்த சரக்குகள் உண்டாகின்றன. உணவு தயார் செய்வதில் உயர்தரச் செடிகளுக்கும் பாசிகளுக்கும் அதிகபேத மொன்றுமில்லை.

சந்ததி யுண்டுபண்ணும் விதம்:—சந்ததி யுண்டாகும் வகைகள் பலவாகும். நுட்பமான பாசிகளில் (படம் 1 சித்திரம் 1 i, ii, iii, iv, v.) அநேகமாய் அறையிலுள்ள ஜீவாதாரவஸ்து தானாகவே யிரண்டாய் முதலில் பிளவுபடுகிறது. பின்பு இவைகள் இரண்டு தனித் தூள்களாய்த் தோன்றக்கூடும். இரண்டு பாகங்களும் பிரியாது அடுத்து மறுபடி பிளவுபடின், தூள்கள் நான்கு கூடியிருப்பவாகும். கடைசியில் இவைகள் தனிச்செடியாகப் பிரிகின்

றன. உயர்ந்த பாசிகளில் சந்ததி வேறு விதமாய்த் தோன்று கின்றன. நூல்போன்ற பாசிகள் துண்டு துண்டாய்ப் பிரி யின் துண்டுகள் தனிச்செடிகளாய் வளரவுங்கூடும். படம் 2 ல் உள்ள இரண்டாவது சித்திரத்தைக் கவனிக்கவும். இந்தப் பாசியின் நூலில ஜீவாதார வஸ்துவோடுகூடிய அறைகளின் நடுவில் அங்குமிங்கும் சில அறைகள் யாதொரு



படம் 3.

படம் 3. பாசியில் ஆண் பெண் தோற்றம்:—(விஷம் வியா சத்தில் காணவும்)

வஸ்துவு மில்லாமலிருப்பதைப் பார்க்கவும். நூல்கள் இவ் விடங்களிலேயே தாமாகவே விண்டுவிடுகின்றன. ஒவ்வொரு துண்டும் புதிய செடியாய் நீண்டுவளரும். புதுமையாயும் பாசி களில் சந்ததிகள் உண்டாகலாம். நூல்போன்றுள பாசி யொன்றைக் கவனிப்போம் (படம் 2 சித்திரம் 4 ii, iii,

iv, v... xv) நாலிலுள்ள எந்த அறையும் சந்ததி யுண்டுபண்ணும் தொழிலைச் செய்யக்கூடும். சாதாரணமாய் ஒரு அறையிலுள்ள ஜீவாதாரவஸ்து அறையின் நடுவே நெருங்கி பல சிறிய அணுக்களாகப் பிரிவுபடுகிறது. ஒவ்வொரு அணுவும் (4 iii) நான்கு துடிக்கும் துய்களுடையது. அறையின் சுவர் பிளக்கவும் இவ்வணுக்கள் வெளியே தோன்றி ஜலத்தில் அங்குமிங்கும் திரிவனவாகும். சற்று நேரத்திற் கெல்லாம் அணுவானது துய்கள் நீங்கி ஓரிடத்தில் கூர்மையான முனையைக் கீழூன்றித் தங்கியிருக்கிறது (4 iv) தேங்கியிருக்கும்போது இதிலுள்ள ஜீவாதாரவஸ்து பல அறைகளுடைய சிறிய புதுச்செடியை உண்டுபண்ணுகிறது. ஆகவே நாலின் அறையினின்றும் வெளிவந்த அணுக்கள் சந்ததித் தூள்களாகும். ஒவ்வொரு அறையிலிருந்தும் பல சந்ததித் தூள்கள் தோன்றுமானால் ஒரு செடியிலிருந்து எவ்வளவு தூள்கள் உண்டாகக்கூடும் என யோசித்துப் பாருங்கள் பூதக்கண்ணாடியின் கீழ் பாசியின் நாலைப் பக்குவகாலத்தில் பார்த்தால் இதினும் விநோதமான தோற்றத்தைக் காணலாம். நாலின் வேறு சில அறைகளினின்றும் முன்போலவே அணுக்கள் வெளிவருகின்றன. இவைகள் நீரில் அங்கு மிங்கு முலாவியபின் இரண்டிரண்டாய் இணைகின்றன. (4 vii) இணையும் தூள்கள் சில பாசிகளில் முதலிற் கூறிய தூல்களைக் காட்டிலும் சிறியனவாயும் இரண்டே துய்களுடையனவாயும் காணப்படுகின்றன. (4 vi) பல பாசிகளில் இணையும் தூள்கள் இணையாச் சந்ததித் தூள்களைப்போலவே யிருப்பன. இணைந்த பின் என்ன நேர்கிறதென்பதைக் கவனிப்போம். சில செடிகளில் இணையாலெழுந்த தூள்சற்றுநேரம் உலாவினபின். ஓரிடத்தில் துய்கள் நீங்கித் தங்க ஆரம்பிக்கிறது. (4 ix) சில நாள் சும்மாவிருந்து பிற்பாடு புதிய செடியை உண்டுபண்ணுகிறது. ஆகவே

இணையாலெழுந்த தூளும் சந்ததித்தூளாகும். இணையாச் சந்ததித் தூள்போல உடனே புதிய செடியாய்வளராது, சில நாள் சென்றபின் புதியசெடியை உண்டுபண்ணுகிறது. இணையாலெழுந்ததூள் நேராகவே புதியசெடியை உண்டுபண்ணாது வேறுவிதமாகப் பக்குவமடைதலுமுண்டு (4 x, xi, xii, xiii, xiv, xv.) இணையாலெழுந்ததூள் அசையாது ஊன்றிப் பல நாளானபின் அதின் ஜீவாதாரவஸ்து பலசிறிய தூள்களாகப் பிரிகிறது. (4 xii) ஒவ்வொருதூளும் முதலிற்சொல்லிய அணுப்போன்ற நான்கு துய்களுடையன. (4 xii).



படம் 4.
படம் 4. கடற்பாசி வகைகள்:—வே-வேர்ப்பாகம் இ இலைப்பாகம்.

இவைகள் வெளியே தோன்றி உலாவுகின்றன. சரியான தங்குமிடமடையவும் துய்கள்நீங்கி ஒவ்வொருதூளும் ஒரு புதுசெடியாக வளர்கிறது (4, xv). இணைந்ததூள் நேராகவே செடியாய் வளராது, சிறியதூள்கள் உண்டுபண்ணி அவைகள் மூலமாய்ப் புதியசெடிகளை தோன்றச்செய்வதால், சந்ததிகள் ஏராளமாய் கண்க்கற்று அதிகரிக்க வழியேற்படுகிறது. இவ்வாறே சந்ததிகள் பலபாசிகளி லுண்டாவதால், பாசிகள் கூட்டங் கூட்டமாய் காணப்படுவது ஆச்சரியமல்ல.

சந்ததித்தூள்கள் சில, இணைவதால் குணமென்ன வென நாம் அறியவேண்டும். இணையாச் சந்ததித்தூள்கள் தோன்றிய வுடனேயே செடியாக வளரக் கூடியவைகள். வளரும் சக்தியைச் சிலகாலம் காட்டாது அடக்கிவைத்தல் இவைகளுக்கு முடியாதகாரியம். சீதோஷ்ணஸ்திதி இத் தூள்கள் தோன்றும்போது, சௌகரிய மில்லாதிருப்பின், தூள்கள் அழிவனவாகும். இணையாலெழுந்த தூள்களோ சில நாட்கள் சும்மாவிருந்து பின்பு சீதோஷ்ண ஸ்திதி சௌகரியப்படின், செடியாக வளரக்கூடியன. இணையாலெழுந்த தூள்கள் காலம் வேறு படுவதால் பீடிக்கப் படுவதில்லை. மேலும் வெவ்வேறு செடிகளினின்றும் தோன்றி வெளி வரும் தூள்கள் இணையக் கூடுமானதால், நல்ல வலுவுள்ள சந்ததிகளை இணையாலெழுந்த தூள்கள் தோன்றச் செய்யு மென்று பெரியோர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். இணை யும் தூள்கள் தம்முள் உருவம் குணம் முதலியவைகளில் பேதமொன்றும் காண்பிக்கவில்லை. ஆகையால் எது ஆணம்சம் எது பெண்ணம்சம் என மேலே கூறிய பாசி களில் நிதானிக்க முடியாது. இணைதலும் அறைகளுக்கு வெளியே ஜலத்தில் நேர்கிறது.

ஆண் பெண்ணம்சங்க ளென்கிற வேறு பாடும் பாசி களில் காணக்கூடும். (படம் 3, 1—6). படத்திலுள்ள தூலின் அறைகளுள் ஒன்று மிகவும் பெரிதாயிருக்கிறது. இதில் ஜீவாதாரவஸ்துவும் உணவுப்பொருள்களும் நிறைந் திருக்கின்றன. இவ்வறையில் ஜீவாதாரவஸ்து கருவாக மாறுபடுகிறது. இக்கரு அறையை விட்டு வெளியே செல்வதில்லை. இதற்கு நகர்தலும் முடியாது. இந்நூலி லேயே இரண்டு சிறிய அறைகள் உள. அவைகளி லுள்ள ஜீவாதாரவஸ்து ஒன்று அல்லது இரண்டு சிறிய

தூள்கள் மாறுபடுகின்றன. இவைகள் பல துய்களுடையன. ஒரு அறையினின்றும் தாங்கள் வெளி வந்துவிட்டன. இவைகள் சற்று உலாவிப் பிற்பாடு கரு அறையை நோக்கிச் செல்கின்றன. கரு அறையின் சுவரில் ஒரு சிறிய துளை ஏற்படவும் அதன்வழியே ஒரு தூள்சென்று, துய்களை இழந்து கருவுடன்கலக்கிறது. அறையினுள்ளேயே தங்கியிருக்கும் கரு பெண்ணம்சமென்றும், கருவைத் தேடிச்செல்லும் சுறுசுறுப்பான தூள்களை ஆணம்சமெனவும் சொல்லலாம். இந்த பாசத்தில் இணையும் தூள்கள் உருவத்தாலும், அளவாலும், குணத்தாலும் வேறுபடுகின்றன. ஆண்தூள் கருவுடன் கலத்தலை; கருவிலைக்கியம் என வழங்கலாம். ஒரு தூள் கருவுடன் கலந்தால் வேறுதூள்கள் அண்ட நாடுவதில்லை. கருவிலைக்கியம் சேர்ந்தவுடன் கருவைச்சுற்றி ஒரு தடித்த உறை உண்டாகிறது. பலநாள் அறையினுள்ளே சும்மாவிருந்து சீதோஷ்ணஸ்திதி சௌகரியமாயிருப்பின், பிண்டம் உறையுடன் அறையை விட்டு வெளியே வருகிறது (படம் 2 சித்திரம் 2). பின்பு இதன் ஜீவாதாரவஸ்து உறையினுள்ளேயே நான்கு பாகமாய்ப் பிரிய ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு பாகமும் பலதுய்களோடு கூடியிருக்கிறது. (படம் 3 சித்திரம் 3 ம் 4 ம்). ஒவ்வொரு சந்ததித்தூளும் சரியான இடத்தைத்தேடி யடைந்து துய்களை நீக்கி ஊன்றிக்கொண்டு கடைசியாக ஒரு சிறு செடியாகிறது. ஆகவே ஒவ்வொரு பிண்டத்தினின்றும் 4 செடிகள் உண்டாகலாம். உயர்தரச்செடிகளுக்குரிய கருவிலைக்கியம் அற்பவினமாகிற பாசிகளிலேயே காணலாம். நாய்க்குடையினத்திற் போன்று பாசியினத்திலும் ஏராளமாய் சந்ததித்தூள்கள் தோன்றுகின்றன. ஆனால் முதலினத்தில் சந்ததித்தூள்கள் காற்றால் எடுக்கப் படுவதற்கேற்ப

மிகச் சிறிய உருண்டைகளாயும் கப்பில்லாதனவாயு மிருக்கின்றன. பாசியிலோ வாழ்நாளெல்லாம் நீரிலேயே செல்ல வேண்டியதாகிறது. சந்ததித்தூள்கள் வேண்டிய இடத்தைத் தாமாகவே அடைவதற்கு உதவியாய்த் துடிக்கும் துய்களை யுடையன. காலம் இடத்திற்கேற்ப உயிர்ப்பிராணிகளில் அங்க வேறுபாடுகள் தோன்றுவதும் புதுமையன்றோ. பாசியினத்தைச் செடியினங்கள் யாவற்றிலும் பழையது என்றும், மற்றைய இனங்களுக்கு அடிப்படையாகியது என்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

* இராமாயண விமர்சனம்.

A Critical Study of the Ramayana

(ஓர் அயல் நாட்டு 'நிபுணர்' எழுதும் வண்ணம்)

நான் இராமாயணத்தை முழுவதும் படித்து மகிழ்ச்சியுற்றேன். அநேக இடங்களில் அதன் அமைப்புக் கடைசித்தர ஐரோப்பிய கவிகளின் நூல்களைப் போன்றிருக்கின்றது. இவ்வளவுரைப்பது இந்துக்கவிகளுக்கு சாதாரண கவுரவமன்று. இராமாயணமெழுதியவர் இன்னுஞ் சிறிதுகாலம் அப்பியாசம் செய்வரேல் நல்ல கவியாயிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

இராமாயணத்தின் ஸ்தூலதாத்பரியம் குரங்குகளின் பெருமையை வருணித்தல். குரங்குகள் தற்காலத்து இமயபர்வதப் பிரதேசவாசிகளான போயர்வால் என்ற நாகரிகமற்ற ஜாதியாரின் மூதாதைகள் போலும். அநாரியக் குரங்குகள் லங்கையை ஜயித்ததும் அரக்கர்களைக் குடும்பத்தோடழித்

---

* இது புகழ்பெற்ற வங்காளி ஆசிரியர் பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயரியற்றிய (Satirical) வியாஸங்களின் ஹிந்திமொழி பெயர்ப்பிலிருந்து பி. யஞ்ஞேசுவர சர்மாவால் கேசனுக்காக தமிழ்ப்படுத்தப்பட்டது. இது இராமாயணத்தைப் பற்றிக் கேவலமாகக் கூறுவதில்லை, அயல் நாட்டு நிபுணர்களையும் பொதுவாகக் குறை கூறுவதில்லை. சிற்றறிவு பெற்ற சிற் சில மூடர் தமது அறியாமையைத் தெரிந்துகொள்ளாது, தாம் அறிந்தனவே அறியத் தகுவன அறியவுள்ளன, மற்றவை யாவும் வீண், என்ற எண்ணங்கொண்டு, இறுமார்ந்து எழுதும் வண்ணம எழுதியதாகும்.—ப-ர்

தனும் இதில் வருணிக்கப்படுகின்றன. அக்காலத்தில் ஆரியர் நாகரிகமற்றவராயும் அநாரியர் நாகரிகம் வாய்ந்தவராயுமிருந்தனர்.

இராமாயணத்தில் சில நீதிக்கதைகளும் இருக்கின்றன. புத்தியின்மை எவ்வளவு பெருங்குறை என்பதை விளக்கக் கவி எத்தனித்திருக்கிறார். ஓர் கிழட்டு மூட அரசனுக்கு நான்கு ராணிகள். அவருக்கு வெகு விவாகத்தின் விஷப் பயன் ஸஹஜமாய்க் கிட்டிற்று. புத்திவாய்ந்த கைகேயி தன் புத்திரனின் மேன்மையின் பொருட்டுக் கிழட்டரசனை ஏமாற்றித் தன் சக்களத்திவயிற்றில் பிறந்த ஜேஷ்டகுமாரனைக் கபடமாய்க் காட்டுக்கனுப்பினள். அவன் இந்தியர்களுக் கியற்கையான ஆலஸ்யத்தின் வசப்பட்டுத் தன் உரிமையைக் காத்துக்கொள்ளாமல் தன் தகப்பன் வார்த்தையைக் கேட்டுக் கொண்டு வனத்துக்குச் சென்றான். இவனோடு அதிபராக்கிரமியான துருக்க வம்சத்து அவுரங்கஜேபை ஒப்பிட்டால் முகமதியர் இந்துக்கள்மீது இவ்வளவு காலம் எப்படி அரசாண்டனர் என்பது விளங்கும். ராமன் வனத்துக்குச் செல்லும்போது யுவதியான தன் மனைவியையும் இட்டுச் சென்றான். அதனால் என்ன பயன் விளையுமோ அது விளைந்தது.

இந்திய ஸ்திரீகள் இயற்கையாய் அஸதிகள். ஸீதையின் நடத்தையே இதற்கு உயர்ந்த பிரமாணம். ஸீதை வீட்டை விட்டுக் கிளம்பினதும் ராமனை விட்டுப் பிரிந்தனள். இராவணனோடு லங்கைக்குச் சென்று சுகித்திருந்தாள். இராமன் மூடன் தலையிலடித்துக்கொண்டு அங்குமிங்கும் அழுது திரிந்தான். இதனாலேயே ஹிந்து ஸ்திரீகளை வீட்டுக்கு வெளியே போகவிடுவதில்லை.

இந்து சுபாவத்தின் கீழ்மைக்கு இன்னுமொரு உதாஹரணம் லக்ஷ்மணன். லக்ஷ்மணனை வருணித்திருப்பதைப் பார்த்தால் அவன் கருமவீரன் என்று தோன்றுகிறது. அவன் வேறு ஒரு ஜாதியில் (nation) பிறந்திருந்தால் பெரிய மனிதனாகியிருப்பான். ஆனால் இவனுக்கு அதில் ஒரு நாளும் சிரத்தையில்லை. இராமனுக்குப் பின்னே பின்னே திரிந்தானே யன்றி ஒரு முயற்சியும் செய்யவில்லை. இது பாரதவாஸிகளின் சுபாவஸித்தமான செயலின்மையின் பயனே யாகும்.

பரதனும் மிகவும் அநாகரிகமான மூடனே. கையில் கிடைத்த ராஜ்யத்தைத் தன் தமையனுக்குத் திருப்பியளித்தான். ராமாயணத்தில் செயலற்றவர்களின் சரித்திரமே நிறைந்திருக்கிறது. இதுவும் நூலாசிரியரின் ஒரு நோக்கமாகும். ராமன் தன் தாரத்தை யிழந்து துயருற்றான். அநாரியஜாதியாரான குரங்குகள் இரங்கி ராவணனை வம்சத்தோடழித்து ஸீதையைப் பிடுங்கிக்கொடுத்தனா. ஆனால் ராமனுடைய ஜாதிஸ்வபாவம் எங்குபோகும்? ஸீதையைக் கோபித்து எரித்துவிட ஆயத்தமாய் விட்டான் ஆனாலும் தெய்வசங்கற்பத்தால் அன்று அவள் பிழைத்தாள். தன் நாட்டையடைந்து நாலுநாள் சுகமாயிருந்தாள். பிறகு பிறர் சொல்லைக் கேட்டுக் கோபமுற்று ராமன் ஸீதையை வீட்டிலிருந்து துரத்திவிட்டான். இந்தக்கோபம் இவர்களுக்கு இயற்கையான குணமேயாகும். ஸீதை பட்டினியால் வாடிப் பல வருடங்களுக்குப் பின் ராமனது வாயிலில் வந்து நின்றாள். அவளைக்கண்டதும் ராமன் குரோதமடைந்து உயிருடனே அவளை பூமியிற் புதைத்து விட்டான். அஸப்ய ஜாதிகளில் இப்படி நடக்கிறதுதான். இராமாயணத்தின் ஸாராம்சமிதுவே.

இராமாயண மெழுதினது யாரென்பது எளிதிற் சொல்ல முடியாது. வால்மீகி எழுதினர் என்று ஜனங்கள் சொல்லு கிறார்கள். வால்மீகி என்ற பெயருடன் ஒரு கிரந்தகர்த்தா இருந்தாரா இல்லையா என்பது இன்னும் நிச்சயமில்லை. வல்மீகம் என்பதிலிருந்து வால்மீகி சப்தம் வந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. இதனால் எங்கோ ஒரு வால்மீ கத்திலிருந்து (புத்திலிருந்து) இக்கிரந்த மகப்பட்டிருக்கு மென்று நினைக்கிறேன். இதிலிருந்து என்ன முடிவு ஏற் படுகிறதென்று பார்க்கவேண்டும்.

இராமாயண மென்றொரு ஹிந்தி புஸ்தகம் பார்த்திருக் கிறேன். அது துளஸிதாஸரால் செய்யப்பட்டது. இரண்டும் அநேக விஷயங்களில் ஒத்திருக்கின்றன. ஆதலின் வால் மீகி ராமாயணம் துளஸீராமாயணத்தின் சுருக்கமாக இருத் தல் அஸம்பாவியமன்று. வால்மீகி துளஸியை நகல் செய் தாரா அல்லது துளஸி வால்மீகியை நகல் செய்தாரா வென் பதை நிர்ணயித்த வெளிதன்றென்பதை ஒப்புக்கொள்ளு கிறேன். ஆயினும் ராமாயணமென்ற பெயரே இதற்கு ஒரு பிரமாணமாகும். ராமாயணமென்ற பதத்துக்கு ஸம்ஸ்கிருதத் தில் அருத்தமில்லை. ஆனால் ஹிந்தியில் பொருள் கூறலாம். ராமாயணமென்பது ஒருக்கால் ராமா-யவநம் என்ற பதத்தின் திரிபாக இருக்கலாம். வ என்ற எழுத்துமட்டும் லோபமா யிருக்கிறது. ராமா-யவனன் அல்லது ராமா-முஸல்மான் என்ற ஏதோ ஒருவரின் சரித்திரத்தைஆதாரமாகக்கொண்டு துளஸீதாஸ் முதலில் ராமாயண மெழுதியிருப்பார். இதை யாரோ பிறகு ஸம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்து வல்மீகத் தில் மறைத்து வைத்திருந்தார். இது வல்மீகத்தில் அகப் பட்டதனால் இதன் பெயர் வால்மீகி என்றாய் விட்டது.

ராமாயணத்தைப் பற்றிக் கொஞ்சம் பிரசம்ஸை செய்திருக்கிறேன். அதிகமெழுதக் கூடவில்லை. இதில் அநேகம் பெருங்குறைகளிருக்கின்றன. ஆதிமுதல் அந்தம்வரை அநாகரிகம் நிரம்பியிருக்கிறது. ஸீதாகலியாணம், ராவணன் சீதையை யபஹரித்தல் முதலியவற்றை அநாகரிகமென்றல்லாதுவேறென்ன சொல்வது! ராமாயணத்தில் கருணாரஸம் மிகக்குறைவு,குரங்குகள் சமுத்திரத்தில் அணைக்கட்டுவதே அதில் கருணாரஸம் பொருந்திய விஷயம். லக்ஷ்மணனுடைய உணவில் கொஞ்சம் வீரரஸத்தின் கந்தமிருக்கிறது. வஸிஷ்டர் முதலிய ருஷிகளிடம் ஹாஸ்யரஸத்தின் லேசம் சிறிது இருக்கிறது. ருஷிகள் மிகவும் ஹாஸ்யப்பிரியர்கள்; அவர்கள் பொதுவாக மத விஷயத்தில் பரிஹாஸம் செய்வது வழக்கம்.

இராமாயணத்தின் பாஷை எளிதாயும் தெளிவாயுமிருப்பினும் மிகவும் கசடுற்றது. ஒரு காண்டத்தில் யோத்தாக்களின் (யுத்தவீரர்களின்) வருணனை சிறிது மில்லையாயினும் அது அயோத்யா காண்டமெனப்படுகிறது. கிரந்தகாரர் அயோத்யாக்களின் காண்டமென்பதற்குப்பதில் அயோத்யாகாண்ட மென்றெழுதியிருக்கிறார். பிராசீன ஸம்ஸ்கிருத நூல்களில் இப்படிப்பட்ட அசுத்த (wrong, bad, mistaken) பாஷையே அதிகமாகக் காணப்படுகிறது. சுத்த ஸம்ஸ்கிருதத்தைத் தற்காலத்திய ஐரோப்பிய வித்துவான்களே கையாளுகிறார்கள்.

தில்லைக் கோவிந்தன்.

Thillai Govindan.

பதினைந்தாம் அதிகாரம்.

என் வீட்டு வாழ்க்கையும் வெளிவாழ்க்கையும் விவரிப்பது.

என் மனைவி முதலில் வரிசையாய் மூன்று பெண்கள் பெற்றாள். அதனால், அவள் அதிகம் ஏமாறி, மனம் நொந்து வருந்தி என் தாயாரின் கட்டளையின்படியும், ஜோஸியர் கிழவிக் கைம்பெண்கள் கூறிய புத்திமதியின் படியும், சில விரதங்களையும் பட்டினிகளையும் அநுஷ்டிக்க ஆரம்பித்து, அஸ்வஸ்தமரத்தையும், அதனடியில் இருக்கும் நாகரையும் பூஜிக்கலானாள். மூடபக்தியும் மூடநம்பிக்கைகளும் அவளிடம் படிப்படியாய் அதிகரித்துப் பலப்பட்டன. அவைகள் சுக சௌகர்யங்களுக்கும் மனோபீஷ்டங்களுக்கும் அடிக்கடி இடையூறாயின. நகைப்பேச்சு புஸ்தகப்பேச்சுத் தவிர மற்றெல்லா விஷயத்திலும் எப்போதும் அவள் என் சொற்படி நடப்பவள். இம்மூலமாய் முன்னுள்ள ஸ்திரமான அபிப்பிராயபேதங்கள் இன்னும் அதிகப்படவே நான் திகலடைந்தேன். மேலும், "தெய்வசந்தேகி" என்று நான் ஊரெல்லாம் பேரெடுத்திருக்க, என்னை யறிந்தவர்கள்முன் என் மனைவி மூடபக்தியில் மூழ்கினவளென விளங்குவதை என் மனம் ஒப்பவில்லை. எனினும் என்தாயார் அவளுக்கு ஓர் அரணாக நிற்கவே நான் கோபித்துக் கொண்டு தடுத்துச் சொன்ன சொற்கள் ஒன்றும் பலிக்கவில்லை. அவள் அழுது மழுங்கி எங்கள் காதல்குன்றாமல் இருக்கச் செய்யும் நாதனை

சக்தியொன்றும் ஏற்படாதொழியவே, ஒன்றன்பின் ஒன்றாய் இச்சிறு சம்பவங்களால், சற்று மனச்சலிப்பும் சச்சரவுகளும் எங்களுக்குள் உண்டாயின.

இப்படி மனவருத்தமும் விசாரமும் அழுகையும் அவற்றிற்குப் பின் மறுபடி புதிதாக சமாதானங்களுமாக கொஞ்சகாலம் ஒருவருக் கொருவர் உள்ள குற்றங்களை மறந்து மன்னித்து மறந்துவந்தோம் எனினும், எங்கள் முழுமுதற்காதல் பாறை போன்று திடமாயிருந்தது. அது பிளவுண்டபின் முன்போன்று முழுக்கோர்க்கை முடியாதாயிற்று; வரவர அவளிஷ்டம் எப்படி யாளுலென்ன என்ற அசிரத்தை அதிகரித்தது.

காதற் பெருமாட்டியின் கட்டளையைச் சிரமேற் கொள்ளும் தீரன், அவள் சிறு வேண்டுகோளை நிறைவேற்றித் தன் னுயிரையும் அளிக்க நிற்கும் தயாளு என்பது போய், ஒருவாறு தன் மனைவியை நேசித்தும், பொதுவாய் அவளைச் சற்றும் கவனியாமல் ஒருபொருட்டாய்ப்பாராட்டாமல்நடந்து கொள்ளும் சாதாரண ஹிந்துக்கணவருள் ஒருவனானேன். என் மனைவியின் மேலுள்ள காதல் ஒழிந்ததென்று கொள்ளக்கூடாது. அப்படியல்ல, அப்பொழுதும், வேறு எந்தஸ்திரீயை விடவும் என்மனைவியிடமே எனக்குக் காதல் அதிகம். இப்பொழுதும் அப்படியே. அது மட்டும் அல்ல, என் அதிஷ்டான தேவதையான அவளைத் தவிர்த்தால், வேறு எந்த ஸ்திரீயையும் நான் எப்பொழுதும் காதலித்ததேயில்லை. அந்தக்காதலே வேறு தன்மையது என்பது எங்களுக்குத் தெரியும். மேலும் எங்களுடைய ஆசைக்குழந்தைகளும் எங்களுக்குள்ள நேசாபாசத்தை அதிகம் பலப்படுத்தின. என்றாலும், குன்றாமல் குறையாமல், நான் செத்தாலும் சுடுகாட்டுக்கு என்கூட வருமென்றெண்ணி நான்

அவள்பால் ஒருகாலத்தில் வைத்திருந்த காதல் அல்ல இப்போது எனக்கிருந்த அன்பு; என்னுயிரைச் சரிவர நிலைநிறுத்தும் சக்தி ஒருங்கே போய் விட்டது. வழியே நடத்திவைக்கும் சுக்கானும் ஒடிந்துபோய் விட்டது. அகத்துறையும் மனச்சாட்சி என்ற காந்தக்கருவியும் திசைகாட்டாது தடுமாறி சீர்குலைந்து போயிற்று எனவே, குடும்பக் கப்பலின் மாலுமி சற்றும் முன்பின் யோசியாதவன் போல், இப்படியும் அப்படியுமாய்த் தடுமாறி, தனக்கோ சுற்றியிருப்பவர்க்கோ யாருக்குமே யாதொரு திருப்தியுமின்றி கப்பலை ஓட்டினான் என்பது ஓர் ஆச்சரியமாகுமோ? அப்படி நான் பரிதபித்த நாட்களில், ஆத்மவிசாரம் செய்த சில ஆபூர்வ வேளைகளில், எல்லாப்பாவங்களின் பாரத்தையும் என் மனைவியின் மேல் போட்டு, அவள் மட்டும் என்னிதயப்படி யிருந்திருந்தால் நான் வேறு எவ்வளவு நல்லவனாயிருந்திருப்பேன் என்று எண்ணுவதுண்டு. அதுவும் வாஸ்தவமாயிருக்கலாம் எனினும், அதைப்பற்றி யோசிக்கும்போது, தான் அதிகம் காலவித்தியாசத்தால் வருந்தியவனென்று விளங்க வேண்டுமென்று உள்ளூர இருக்கும் அவாவால் தூண்டப்பட்ட அந்த வழக்கிலுள்ள இழுக்கு இப்போது நன்கு புலப்படுகின்றது. ஏனெனில், என்னைவிட அவளுக்கு என் மீது அதிருப்தியடைய அதிகம் காரணங்கள் இருக்க, அவள், என்பால் காட்டிய காதலிலோ, பொதுவாய் நடத்தையிலோ, என்னவ்வளவு மாறுதலடையாமல், அவ்வளவிற் கெல்லாம் யோக்யதை யில்லாத என்னிடத்திலும், மனோவாக்கு காயம் ஆகிய மூன்றிலும் அப்பு அழுக்கு அற்றுத் தூய்மை வாய்ந்திருந்தாளன்றோ! எழுத்தறியாத அவளது இருதயம் செம்பொன்னாய் விளங்க, படித்துப் பட்டம் பெற்ற என்னிதயமன்றோ பித்தளையென்று ஆயிற்று. உயர்தரத் தருமத்தினின்றும் அவள் ஒருபோதும் அணுவளவுகூட விலகி நடக்

கவில்லை. அதனாலன்றோ, தெய்வச்செயலாய், என்னையும் இறுதியில் காப்பாற்ற முடிந்தது. ஈதெல்லாம் நான் எழுத நினைக்கவில்லை. உலகத்தோருக்கும் இவை சொல்லத்தக்க தல்ல; ஒரு வேளை அவர்களும் கேட்க விரும்பும் விஷயமா யும் இராது. இருந்தாலும் இருக்கட்டும்.

தன் பெரும் துயரத்தையே உடுத்து ரிஷி பத்தினி போல் விளங்கிய என் தாயை, ஹிந்து மனைவியின் தர்மத்தை விளக்கும் சிறந்ததோர் உதாரணமாய்க்கொண்டு, அவளுக் குத் தகுந்த நல்ல பிள்ளையாய் அவள் மனம் போல் நடப்ப தென்று நான் தீர்மானித்திருந்தேன். அநேக விஷயங்களில் அவளிட்டது சட்டம். அவள் சொற்படி நடப்பதில் என் மனச்சாக்ஷியின் தூண்டுகோலையும் அடிக்கடி மீறி நடந் திருக்கிறேன். என்னைச் சுற்றி யுள்ள உலகமோ, பொய்யும் பித்தலாட்டமும் நிறையப்பெற்று ஒருவரை யொருவர் ஏமாற் றுவதும், தன்னையே ஒருவாறு ஏமாற்றிக் கொள்ளுவது மாயிருந்தது. அப்படிப்பட்ட உலகில், என்தாயாரின் அபீஷ் டங்களான அற்பவிஷயங்களில் மனச்சாக்ஷி என்பதை ஒரு மூலையில் ஒதுக்கிவிடவேணு மென்றெண்ணினேன். ஒரு நாள், தான் சாகுமுன் நான் காலையில் ஸ்நாநம் செய்து ஒழுங் காய் சந்தியாவந்தனதிகள் செய்வதைப்பார்க்க ஆசைப்படு வதாகச் சொன்னாள். நானோ நாஸ்திகன் (அநீச்வரவாதி), என்றாலும் அவளிஷ்டப்படி நடந்து கொள்ளவேண்டு மென்று சந்தியாவந்தன மந்திரங்களை வெகு காலமாகவே மறந்து போய்விட்டேனாதலால், சந்தியாவந்தனப் புஸ்தகம் ஒன்று புதிதாய் வாங்கி அதிசிரத்தையுடன் என் நண்பர் களும் அயல் வீட்டாரும் அதிசயிக்க, யதோக்தமாய் சந்திய கர்மா னுஷ்டானங்கள் செய்து வந்தேன். திடகாத்திரரான ஏழைகளுக்கு யோசியாமற் பிச்சையிடுவது பிசகென்பது

எனது தீவிரமான கொள்கை; என்றாலும் என் தாயாரின் விருப்பத்துக் கிணங்கி, எங்கள் வாசற்படி வரும் யாசகன் எவனுக்கும் "இல்லை" என்பது கிடையாது. என்மனத்திற்கு நேர் விரோதமான தெல்லாம் பிரதிதினம் நடைபெற்றது; எங்கள் வீட்டில் நடந்தவிசேஷங்களுக்கும் விரதங்களுக்கும் தேவாராதனை முதலிய பூஜைகளுக்கும் ஒரு கணக்கு இல்லை. அவைகளில் அநேகத்தில் நானும் தலையிட்டு, எனக்குள்ள அருவருப்பைத் தூரவிலக்கி, கூடியமட்டும் உல்லாசமாய் நடந்து கொள்ளவேண்டிவந்தது.

எனக்கும் என் தாயாருக்குமுள்ள அபிப்பிராய பேதங்களை யெல்லாம் ஞாபகப்படுத்திக்கொண்டு அச்சமயங்களில் நான் எவ்வாறு அவளுக்கிணங்கி நடந்து வந்தேன் என்றெல்லாம் இங்கே எடுத்தெழுதுவது வாசிப்போருக்கு வீண் சிரமம் தருமேதவிர வேறு யாதொரு பயனும் தராது. மேலும் அப்படி எழுதுவதும் சரியல்ல. அதுவும் என் நன்றியின்மையல்லவோ குறிக்கும். விட்டிற் பூச்சி போன்ற அநித்தியமான இவ்வுலகவாழ்வில் தாய் வேண்டின் விட்டொழியத்தகாத அவ்வளவு முக்கியமான பிரமாதமான பொருள் என்ன விருக்கின்றது.

என் சிறு சகோதரியைப் பற்றி முன்னமேயே சொல்லியிருக்கிறேன். அவளுக்கு ஐந்து வயதானதும் என் தாய் தந்தையர் அவளை ஒரு பணக்காரப்பண்ணையாரின் மகனுக்கு விவாகம் செய்தனர். பிறகு, நாலுவருஷமானதும் அந்தப் பையன் சுரம் கண்டு இறக்கவே, என்னருமைக் கோமளம் காதலிப்பதும் காதலிக்கப்படுவதும் இன்ன தென்றறியு முன் கைம்பெண்ணென்றாய் விட்டாள். அவள் அதிபுத்தி சாலி. நல்ல அழகு வாய்ந்தவள். வேடிக்கையும் விளையாட்டு மாய் எப்போதும் கலகலவெனவிருப்பவள். அவளுக்கு இக்

கதிவாய்த்தது என் தாயாருக்கு அதிகத்துயரையும் மனக் கலக்கத்தையும் உண்டு பண்ணிற்று. அவளை மறுபடி கல்யாணம் செய்து கொடுக்கலாமென்று இருந்தேன். ஆனால் என் தாயாரோ அதைவிடத் தன் கையாலேயே வேண்டுமாயினும் அவளைக் கொலை செய்யக்கூட சம்மதிப்பாள் என்று ஏற்படவே, அந்த ஒன்று மறியாத பேதை அப்படியே இருக்க வேண்டியிருந்தது. என் தாயார் காலம் சென்ற பின், அநேக வருஷங்களான பின், மறுபடி என் தங்கைக்குக் கல்யாணம் செய்விக்கலாமென்று முயன்றேன். வைதீகப் பையன்களோ அதற்கு உடன்படமாட்டார். ஆங்கிலம் கற்ற படித்த பையன்களும் ஊர் ஏச்சுக்குப்பயந்து அவளை மணக்க முன் வரவில்லை. எல்லாவற்றிலும் ஒரு கைபார்த்து தோல்வியடைந்த சோதா ஒருவன், நன்னடத்தை நற்புத்தி ஒன்றுமே இல்லாத அசடன், பதினாயிரம் ரூபாய் வரை என் தங்கைக்குச் சீதனமாய்க் கொடுத்தால் அவளைக் கல்யாணம் செய்து கொள்வதாய்ச் சொன்னான். எனக்கோ அவளை எப்படியாவது சுகமாய் வாழச்செய்யவேண்டுமென்ற ஆசை ஒன்றே முன்னிற்க, அவள் இஷ்டமென்ன வென்று விசாரித்தேன். அவளோ, நான் எதிர் பாராதநற் புத்திவாய்ந்தவளாய், அப்படிப்பட்டவனை மணக்கமாட்டேன் என்று உறுதியாய் மறுத்ததோடு, அவளுக்குப் புனர் விவாகம் செய்வித்தால் கலியாணப்பருவத்தை யடைகின்ற என் பெண்களையாரும் கல்யாணம் செய்து கொள்ளமாட்டார்கள் என்றும் எனக்கு எடுத்துக் காட்டினாள். பிறகு, நாகரீகச் சீர்திருத்தச் சபையொன்று கூட்டி, அதில் ஒரே மாதிரியான உயர்ந்த அபிப்பிராயங்கள் கொண்டு எல்லாருக்கும் பொதுவான நேரக்கங்களாலும் யோசனைகளாலும் கட்டுண்டு ஊரேச்சுக்குப் பயப்படாமல் தைரியமாய் முன்னின்று இப்போது போல் கெட்டவழக்கங்களால் கட்டுண்டிராமல் நற்

புத்தி வாய்ந்து நடக்கும் வம்சங்களை ஸ்தாபிக்கக் கூடிய சிறப்புப் பெற்றவரை ஒரு கூட்டமாய்ச் சேர்க்கப் பிரயத்தினம் செய்தேன். அந்தோ, வெகு சிரமப்பட்டுப் பொறுக்கியெடுத்து பிரத்யேகமாய் ஒவ்வொருவருக்கும் தனித் தனியே இந்த விஷயத்தைப்பற்றி நான் கடிதம் எழுதிய நூற்றுவரில், ஒரு பத்துக் கனவான்களுக்குமட்டுமே நான் வீணாக இப்படிக் காகிதமும் பொழுதும் பிரயாசையும் செலவிட்டதற்குப் பலனாக, பதிலளிக்க மனம் வந்தது; அவர்களும், என் எண்ணம் அபிப்பிராயம் எவ்வளவு நன்றாயும் மேலானதாயும் அத்தியாவசியமாகவும் இருந்தாலும், தற்காலத்து ஜனசமூக ஸ்திதியை உத்தேசித்தால், சற்றும் பலன் படக்கூடியதன்று என்று ஒரே மாதிரியாய் அபிப்பிராயப் பட்டார்கள். என் பிரயாசையும் சிரமமும் இப்படி முடிந்தது.

எனக்கு, பெண்களுக்கும், பிறகு பிறந்த பிள்ளைகளுக்கும் குறைவில்லை. எங்கள் ஜாதியில் பையன்களை மணத்திற்காக விலைக்கு வாங்குவதும் பெண்களுக்குக் கல்யாண சமயத்தில் அதிகம் சொத்து சீதனமாக வைப்பதும் வழக்கம். தகப்பன் அந்தஸ்துக்குத் தக்கபடி பெண்கல்யாணத்தில்மாப்பிள்ளைக்கு அதிகம் பணம்கொடுக்கவேண்டும். இதிலாவது, என் மனப்போக்கின்படி நடக்கவேண்டுமென்று எண்ணி, என் பெண்களை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினேன்; வீட்டில் உபாத்தியாயர் வைத்தும் சொல்லிக்கொடுத்தேன். அப்படியாவது அவர்களின் அபூர்வ அழகையும் படிப்பையும் கண்டால் படித்த பையன்கள் வலியவந்து கல்யாணம் செய்து கொள்வார்கள் என்று எண்ணினேன். என் மூத்த பெண்ணுக்கு ஏழுவயதானது முதல் என் தாயாரும் மனைவியும் வரன்தேடும்படி என்னைத் தொந்திரை

செய்ய ஆரம்பித்தார்கள். என் தாயார், வழக்கம்போல், தான் சாகுமுன் கமலாவுக்குத் தாலிகட்டிப்பார்க்க ஆசைப் படுவதாகச் சொன்னாள். ஆனால் அதைச் சட்டை செய்யா மல் விளையாட்டாய், அவ்வளவு சீக்கிரம் அவள் சாகக்கூடா தென்றும் அதற்காகவாவது கூடியமட்டும் கமலாகல்யாணத் தைத் தாமதப்படுத்த வேண்டுமென்றும் பதில் சொன்னேன். இந்த மாதிரிச் சாக்குச்சொல்லி இரண்டு வருஷங்கள் தான் தள்ள முடிந்தது. கமலாவுக்கு ஒன்பதாவது வயது பிறந் ததும், மாப்பிள்ளை தேடவேண்டி வந்தது. அதற்காகச் சென் னைப் பட்டணத்திற்குப்போய், அங்கே சகல சர்வகலாசாலை களிலும் போய்ப் பார்த்து, எங்கள் ஜாதியில் எங்கள் வகுப் பைச்சேர்ந்த மூன்றுபையன்களைப் பொறுக்கியெடுத்தேன். அவர்களில் ஒருவன் சகோத்ரி என்று தள்ளிவிடவே, மற்றி ருவரில் ஒருவன் நேராகக்கூசாமல் "உங்கள் பெண்ணுக்கு ஆயிரரூபாய் சீதனம் கொடுப்பீரா!" என்று கேட்கவே ஆச் சரியமடைந்து, அவனுக்கு ஒரு நமஸ்காரம் செய்துவிட்டு, தனக்கு பி.எல். பரீக்ஷைக்குவாசிப்பதற்குப் பண உதவி எதிர் பார்ப்பதாகமட்டும் ஜாடையாய் அறிவித்தமற்றவனையே உறு தியாகக்கொண்டேன். பிறகு ஜாதகங்கள் பொருந்தவேண்டி யிருந்தது. என் மட்டிலும்,ஜோஸியத்தை, தானே பெரியவன், உலகமெல்லாம் தனக்காகவே யிருக்கின்றன என்னும் மனித னுடைய அகம்பாவத்தை நன்கு விளக்குவது என்று நான் கருதினேன்; மேலும், ஒரு ஜோசியர் இது விஷயமாய் ஏதோ சந்தேகமாய்ச் சொல்லவே, உடனே கமலாவின் ஜாதகத்தைக் கிழித்தெறிந்து, அன்று முதல் அவள் பிறந்த வேளையில் ஜாதகம் கணிக்க மறந்துபோய் விட்டதாகவும், அப்படி இப்போது கணிப்பதற்கு வேண்டிய அம்சங்களை யும் குறிக்கவில்லை என்றும் சொல்லிக்கொண்டிருந்தேன்.

பையனுடைய தகப்பனருக்குக் காகிதம் எழுதியதில் அவரும் சம்மதித்தார். நான் பட்டணம் விட்டுத்திரும்பு முன் கமலாவின் வரன், எப்படியோ, நான் அவனுக்கு மூந்நூறு ரூபாயில் ஒரு துவிச்சக்கிரவண்டி வாங்கிக்கொடுக்கும்படி செய்துவிட்டான். என் தாயார் மேற்பார்வையில், கமலாவுக்குப் போட்ட நகைகளும் மாப்பிள்ளைக்குச் செய்த சீர்களும் தவிர, கல்யாணச் செலவு இரண்டாயிரரூபா ஆயிற்று.

மதசம்மந்தமான என் சந்தேகங்களெல்லாம் பேச்சிலும் எண்ணத்திலுமே; அப்படியே தர்மம் ஜனதார சாஸ்திரம் இவைகளைப்பற்றிய என் தீவீரமான அபிப்பிராயங்களும் பேச்சோடு நின்றன. அவைகட்கும் நான் தினசரி நடந்துவந்த வாழ்க்கைக்கும் சற்றும் சம்பந்தமே கிடையாது. சிலவிஷயங்களில், யாராலும், தனித்து நின்று ஜயித்தோ, நிராகரித்தோ, ஊராரின் பலமான கொள்கைகளுக்கு விரோதமாய் நின்று தன் அபிப்பிராயப்படி சாதிக்க முடியாதென்பதையும்; அவைகளில் அதிகமுக்கியமாயும் எனக்குத் தென்பட்ட மட்டிலும் பொது ஜனங்கள் தலையிட்டுக் கொள்ள வேண்டுமென்றும் தோன்றிய அத்யாவசியமான இதரவிஷயங்களைப் பொது ஜனங்கள் சற்றும் கவனிக்காதிருப்பதையும் நாளடைவாய் அநுபவத்தில் நான் நன்குணர்ந்தேன். ஏதோ புராதன நாகரீகத்தின் அர்த்தமற்ற அம்சங்களாய் இப்போது விளங்குகிற சிற்சில பழக்க வழக்கங்களை வெளிக்கு மட்டும் அநுஷ்டிப்பது மட்டுமே நம்மிடமிருந்து எதிர் பார்க்கப்படுகின்றது. பூணூல்தரித்து, பிராமண ரல்லாதாருடன் பஹிரங்கமாய் சாப்பிடாமலும், கொண்டு கொடுத்து கலியாணம் செய்யாமலும் இருக்கும் வரை, என்னைப்பிராமணன் என்றேமதிப்பார்கள்; அந்த உன்னத அருணத்தாரின் உரிமைகள் முழுமையும் எனக்கு அளி

ப்பார்கள். சிற்சில அற்ப அநுஷ்டானங்களையும் மேற்கொண்டால் வைதிக சிரத்தை வாய்ந்த கனவானெனப் புகழ்வார்கள். அநேக விதமான பிரத்தியக்ஷ தோஷங்களையும் மறைப்பிக்கின்ற சக்தி பணத்திற்கு எப்போதும் இருப்பதையும் உணர்ந்தேன். நான் விடனாகவோ, பிறர்மனையேகும் பாவியாகவோ, குடிகாரனாயோ, பொய்யனாயோ, மோசக்காரனாகவோ இருக்கலாம்; தெய்வச் சொத்தை திருடித்தின்னலாம், சற்றும் கூசாமல் பொய் சத்தியம் செய்யலாம்; இவ்வித விஷயங்களில் பொதுஜனங்கள் சுயேச்சையாய்நடக்கும்படி அவிழ்த்து விட்டிருந்தார்கள். என்னைப்பற்றிக் கவனிக்க மாட்டார்கள். ஆனால், என்தலைமயிரை ஒட்டக்கத்திரிக்கவோ மீசை வளர்க்கவோ தொப்பி தரிக்கவோ பூணூலை எடுத்தெறியவோ தலைப்பட்டாலும், என் இளம் சகோதரி அமங்கலியானதும் அவள் அழகிய கூந்தலை எடுக்கச் சம்மதியாவிட்டாலும், என்மனைவியை என்னுடன் காற்றுடத் திறந்த வண்டியில் கூட்டிச் செல்ல நினைத்தாலும், அவள் வெய்யிலில் வெளியிற் சென்றால் குடைபிடித்துக் காலில் பாதரக்ஷை தரித்துச் செல்லும்படி செய்தாலும், உடனே இப்பொதுஜன வித்வான்கள் என்னைத் திரஸ்கரித்து, அவர்கள் மத்தியில் எனக்கு இருப்புக் கொள்ளாத வண்ணம் செய்வார்கள். என் மனைவியை அடிக்கலாம், அவளைப் பட்டினிபோடலாம், அவள் கண்ணெதிரில் இருபது வைப்பாட்டிகளை அகத்திற்குக்கொண்டு வந்து வைத்திருக்கலாம். அவள் மட்டும் என் சிநேகிதரான புருஷர்களுடனும் வாய்திறந்து பேசக்கூடாது. வேறொருவர் இருப்பின், என் முன் அவள் உட்காரக்கூடாது. உலகத்தில் சிறந்தவை என்று பெயர் பெற்ற ஏழு அற்புதங்களும் 'ஊர் வாய்' என்ற இவ்வற்புதத்தோடு ஒப்பிடும் வகையற்றன. இதின் புத்திசாதுர்

யத்தோடு ஒப்பிடுங்கால் கிரேக்க தேசத்தில் பிரசித்திபெற்ற ஏழு முனிவரும் சுத்த மூடர்களாவரன்றோ ? இவ்விதம் கடுங்கோல் செலுத்திய ஜனசமூகத்தின் இஷ்டப்படி யெல்லாம் கீழ்ப்படிந்து நடந்தும், வீட்டில் தாயாரின் மனமொப்ப நடக்கும் பிள்ளையாய் நடந்து கொண்டேன் என்ற மானக் கேட்டையும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

ஆனால், வீட்டைவிட்டு, வெளியில் நீண்ட அங்கி பூண்டு தலைப்பாகை தரித்துக் காலில் உயர்தரத் தோலாலமைக்கப் பட்ட ஜோடுமாய் விளங்கும்போது, நான் வேறொரு கோவிந்தனைய் விடுவேன். ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு ஆத்ம விகாரங்களிருக்கின்றன. ஒன்று கொண்டு உலகம் தாக்கவும், மற்றது தான் காதலிக்கும் பெண்மணி யிடம் காட்டவும் ஆக இரண்டு உள என்று "பிரௌனிங்" என்ற ஆங்கில கவி கூறியுள்ளார். அது இந்தியரல்லாதாருக்கு மட்டும் போலும்; ஏனெனில், இங்கு, இந்தியாவில், குறைந்த பக்ஷம் மூன்று விகாரங்களாவது அவசியம் வேண்டும். மேற் குறித்த என் குடும்ப வருணனையிலிருந்து, புத்திகோசரமான யாதொரு விஷயத்தைப்பற்றியும் நான் பிராணசமானமாய்க் கருதக்கூடியவரிடம் நான் வியவகரித்துப்பேச முடியா தென்பது விளங்கும். அவர்களோ படிப்பறியாதவர், பக்குவப்படுத்தப்படாத புத்தியை யுடையவர். பிறருடன் சம்பாஷிக்கத்தகுந்த எவ்வித விஷயத்திலும் அவர்களால் சற்றும் புத்திசெலுத்தி சிரத்தையெடுத்துக்கொள்ள முடியாது. ஒரு தரம், நான், ஒரு தடவை, கைப் பைத்தியத்தின் கேடுகளைப்பற்றி விஸ்தரித்து (Political economy) சாஸ்திரத்தின் நுட்ப விஷயங்களில் மறந்துபோய்ப் புகுந்துபேசியது எனக்கு ஞாபகமிருக்கிறது. அப்போது தெளிவாய் மறுக்க முடியாத வழக்கு ஒன்று எடுதததுப்பேசிய. பின், மூச்சு

வாங்கவே, கேட்டுநின்ற பெண்டிரின் அபிப்பிராயத்தை அறிவதற்காகப் பேச்சை சற்று நிறுத்தினவுடன், என் மனைவி, பொன்வெள்ளி இவையாலான நாணயங்களைவிடப்பொன்வெள்ளியாலான நகைகள் எப்படி அதிகம் கேடு விளைப்பன: எல்லாம் அதே உலோகங்கள்தானே என்று சொன்ன பேதை மொழியை நான் கேள்வியுற்றதும் என் ஞாபகத்திற்கு வருகின்றது. அது முதல் பிறப்பு இறப்பு கல்யாணம் முதலியவற்றைப்பற்றியும்,சமையல் சாப்பாடு மற்ற அக்கப்போர்முதலியவற்றையுமே என் குடும்பத்தாருடன் கலந்து பேசுவோனாய், "கிளப்பு" க்கும் பொது உபந்நியாசமேடைகளுக்குமே உரியன மற்ற விஷயங்கள் என்று அவைகளை அப்புறம் ஒதுக்கி விட்டேன். அடியோடு சீர்திருத்தம் செய்யவேண்டியது, உடனே ஒரு சட்டம் ஏற்படுத்தி வர்ணாச்சிரம வித்தியாசங்களை யெல்லாம் ஒழித்துவிட வேண்டுமென்றுஒரு தரம் எடுத்துப் பேசினேன். நானோ, கனத்த தடியை விட இலேசானபிரம்பே தாங்கு கோலாகக் கைக்கொள்ளும் நோஞ்சல்ப் பிராமணன். ஆனால் இந்தியாவில் ஆயுத உபயோகத்தைக் கட்டுப் படுத்தும் சட்டத்தின் கொடுமையையும் மானக்கேட்டையும் பற்றி இடி இடிப்பதுபோல் பிரசங்கம் செய்வதில குறைவில்லை. பக்ஷபாதமின்றி எல்லா மதங்களின் ஏற்பாடுகளும் தூஷிக்கப்பட்டு, உலகத்திலுள்ள சகல கேடுகளும் அவைகளால் விளைவன என்று என்னால் அவையெல்லாம் கண்டிக்கப் பட்டன. அப்படியே ஸ்திரீகளின் அஸ்வாதந்திரியத்தைப் பற்றி நொந்து, அவர்களை மேலெழுப்பி புருஷர்களுக்குச் சரியாய் சமபதவியில் சமானமான உரிமைகளுடன் அவர்களும் வைக்கப்பட வேண்டுமென்று வெகு உருக்கமாய் பிரார்த்திக்கப் பட்டது. கல்யாணம் செய்து கொள்ளும் ஸ்திரீ-புருஷர் இருவரும் தக்க

வயது வந்து கல்யாணச் சடங்கினால் உண்டாகும் கடமைகளை நன்குணர்ந்து அதன்படி நடந்துகொள்ளக் கூடிய பருவம் அடையுமுன் கல்யாணங்கள் நடக்கக் கூடாது; மேலும், ஸ்திரீ புருஷரில் யார்வேண்டிலும், அவர் இஷ்டப் பட்டபோது கல்யாணத்தை ரத்துசெய்யும் வகையாய் மதக் கோட்பாடு ஒன்றுமில்லாமல் உலக நடவடிக்கைகள் போன்று கல்யாணங்களும் நடத்தப் படவேண்டும் என்றும் அபிப் பிராயப் பட்டேன். சுருங்கச்சொல்ல, கூடியமட்டும் சுயேச் சைப்படி நடக்க அதிகாரம் வேண்டு மென்றும், அவ்வித சீர் திருத்தங்களுக்கு வழிபண்ணும் பிரயத்தனங்களில் காலதாமதம் கூடாது என்றும் கடினமாய்கண்டனம்செய்யப்பட்டது. இவ்விதம் முரண்டி உபந்நியசித்த காலத்தைச்சேர்ந்த பல வியாசங்களும் வேறு நான் எழுதிய காகிதங்களும் கொண்ட பெரிய காகித மூட்டை ஒன்று என்னிடமிருந்தது. இரண்டு வருஷங்களுக்கு முன்பு தான் மண்ணெண்ணெய் கொண்டு அதற்குத் தகுந்தபடி அபிஷேகம் செய்வித்து, பிறகு அது யதோக்தமாய் தகனம் செய்யப்பட்டது.

(தொடரும்)

குறிப்புக்கள்
Notes
1. லிங்க நிர்ணயம்
1. The Determination of Sex.

உலகப் பிரசித்தி பெற்ற உயிர் நூல் விற்பன்னரான ப்ரொபஸர் ஹக்ஸ்லியின் பேரனான ஜூலியன் ஹக்ஸ்லி என்பவரும் உயிர் நூல் விஷயமாய் மிக நுட்பமான ஆராய்ச்சிகள் அனேகம் செய்துவருகிறார். அவர் சமீபத்தில் அரசாங்கக் கலாசங்கம் (Royal Society of Arts) என்று பெயர் பூண்ட உயர் நிபுணர் சங்கத்தில் "லிங்க நிர்ணயத்தைப் பற்றி உயிர்நூலார் கொண்டுள்ள சில கொள்கைகள்" என்னும் விஷயத்தைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சாராம்சம் வருமாறு. நுண் நுண்ணிய உயிர்வித்தின் மத்திய தேசத்திலுள்ள க்ரோமோஸோம் (Chromosome) என்னும் நுண்ணிய நிறஅணுக்கள் தாம் லிங்க பேதத்தை விளைவிக்கின்றன. அவற்றின் மாறுபாடுகளுக்கிணங்க, லிங்கபேதங்களும் பிற ரூபபேதங்களும் உண்டாகின்றன. அவை யாவும் நுண்ணிய இரசாயனப் பொருள்கள். இரசாயனப் பொருள்களின் (Chemical substances) தன்மைகளையும், அப் பொருள்களையுமே மாற்றுவிக்க வல்ல செயற்கைச் செயல்களால் இந் நிற அணுக்களையும் மாற்றக் கூடும். அவற்றை மாற்றுவதால், அவற்றின் செயல்களாகும் லிங்க ரூப நிர்மாணங்களையும் மாற்றக் கூடும். இவ்வாறு செய்தற்கு முன் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுண்டு, அதாவது எவ்வேளைகளில் எவ்வாறு அவை லிங்க நிர்மாணத் தொழிலில் இருக்கின்றன என்பது.

அவ்வவ் வேளைகளில் அவற்றின் தன்மைகளை மாற்றினால் மட்டுமே நாம் நினைக்குமளவில் சிறிதாவது பயன்படும். விளக்குப் பூச்சி யினத்தைச் சார்ந்த சில பூச்சிகளைக் கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தியதில் சிறிது பயன் கிடைத்திருக்கிறது. கிரமமான வேளைகளில் அவற்றின்மீது வெயில் முதலியன படும்படி செய்து சோதனைகள் நடத்தியதில் நினைத்தபடி ஆண் பூச்சியோ பெண்பூச்சியோ உண்டாக்க முடிகிறது இது தான் முதற் படி. இனிமேல் வர வர ஆராய்ச்சியால் அறிவும் அறிவால் ஆராய்ச்சியும் பெருகப் பெருக மனித இனத்திலும் கூட நினைத்தபடி, காலத்திற்கேற்றபடி, ஆணையோ பெண்ணையோ உண்டாக்கக் கூடிய ஒரு காலம் வரும் என்று நிச்சயத்துடன் எதிர்பார்க்க இடம் உண்டு.

---

2. வைரம்

2 Diamond

இரத்தினங்களுள் ஒளியிலும், அழகிலும், விலையிலும் மேன்மையானது வைரமே. இதில் சற்று நீல ஒளி காலும் வைரம் மிகச் சிலாக்கியமானதென்றும் வெறும் வெள்ளொளி காலுவது இதைவிடச் சற்று மதிப்பிற் குறைந்த தென்றும், சிறிது மஞ்சள் வர்ணமாகத் தோற்றும் வைரம் இதிலும் விலை குறைந்த தென்றும் கூறுவர். கறுப்புவைரங்களும் உண்டு. மேலும் இந்நிற வித்தியாசத்தினாலன்றி அளவு வித்தியாசத்தினாலும் வைரங்களின் விலை மதிப்பில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுவன.

முன் காலங்களில் தற்காலத்தில் போல அவ்வளவு அழகாய்ப் பட்டைபோடத் தெரியாததால் வைரத்தின் முழுமையான அழகு வெளித்தோன்றவில்லை. மாணிக்கமும்.

மரகதமும் இதனினும் மேன்மையான இரத்தினங்களென்று கருதப்பட்டிருந்தன.

வைரங்கள் பொதுவாக மெல்லிய ஆற்றுமணலின் அடியில் இருக்கும் களிமண்ணின் அடியில் புதைந்து கிடப்பனவெனினும் சிற்சில இடங்களில் கல்லின் நடுவில் பதிந்திருப்பதும் உண்டு. ஆகவே வைரச் சுரங்கங்கள் என்பன ஆற்றுக் களிமண்ணைத் தோண்டி எடுத்துக் கழுவுமிடங்கள் அல்லது பாறைகளின் ஊடேயுள்ள வைரம் பதிந்த கற்களைத் தோண்டியெடுக்க வெட்டிய கனிகள்.

வெகு காலமாக நமது தேசமாகிய இந்தியாவே வைரம் விளையும் நன்னாடெனக் கருதப்பட்டுவந்தது. பிறகு ரஷ்ஷியாவிலுள்ள யூரல் மலைத்தொடரிலும், வட அமெரிக்காவில் வடகரோலினா, ஜியார்ஜியா என்னுமிடங்களிலும், தென் அமெரிக்காவில் ப்ரேஸீல் என்னும் தேசத்திலும், தென் ஆப்பிரிக்காவிலும், ஆஸ்ட்ரேலியாவிலும் வைரங்கள் அகப்பட்டன. தற்காலத்தில் தென் ஆப்பிரிக்காவிலிருந்தே மிகுதியான வைரங்கள் வெட்டியெடுக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள கிம்பர்லிச் சுரங்கங்கள் 1870-வருஷத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தப்பிரதேசத்திலிருந்து அக்காலமுதல் இந்நாள் வரை சராசரி வருஷம் ஒன்றுக்கு மூன்று நான்கு கோடி பெறுமான வைரங்கள் தோண்டியெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அகப்படும் வைரங்களுள் பல சிறியவை சில பெரியவை. சில அளவின் மிகுதியாலும், சில ஒளியின் மிகுதியாலும் வேறு சில மற்றக் காரணங்களாலும் பெருமை வாய்ந்து தனித்து நிற்கின்றன. இவற்றுள் சிலவற்றைப்பற்றிப் பின்னர் கூறுவோம்.

அ.